www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணை பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 6th Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| நாடகமும் அரங்கியலும் - I<br>Drama & Theater - I | Three Hours<br>Gr. 13 (2022) | 58 | T | I |

### பகுதி – I

➤ **இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும், சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் இடுக.**

01. "சடங்கு என்பது கூட ஒரு நடைமுறை தான் ஆனால், அது உழைப்புப் போக்கலிருந்து வேறுபட்டது." எனக் குறிப்பிட்டவர்.
 1) றிட்ஜ்வே 2) ஜோன் ஹரீசன் 3) ஜே. ஜே தொம்சன்
 4) பக்தவத்சல பாரதி 5) ஒஸ்கார் புரொக்கற் (…….)

02. 'தூய உள்ளுணர்வின் வெளிப்பாடே கலை' எனக் கூறியவர்?
 1) குரேசு 2) அரிஸ்ரோட்டில் 3) எரிக் நியூட்டன்
 4) ஹகல் 5) பல்ஸ்ரய் (…….)

03. மேல் வருவோருள் யார் இல்லாது நாடக அளிக்கையொன்றைச் செய்ய முடியாது.
 1) நெறியாளர் 2) நாடகாசிரியர் 3) நடிகர்
 4) முகாமையாளர் 5) தயாரிப்பார் (…….)

04. மேல்வருவனவற்றுள் எதன் காரணமாக நாவல் இலக்கியத்திலிருந்து சிறுகதை இலக்கியம் வேறுபடும்?
 1) மொழியை ஊடகமாகக் கொண்டிருத்தல்
 2) வாசிக்கத் தக்கதாய் இருத்தல்
 3) உடனடி துலங்கலுக்கு உட்படாததாய் இருத்தல்
 4) சம்பவம், பாத்திரம் ஆகியன வரையறுக்கப்பட்டிருத்தல்
 5) எழுத்து வடிவில் அமைந்திருத்தல்
 (…….)

05. நடிக்கும் போது நடிகர் மேடைக்குள் பிரவேசிக்காது பேசும் மொழி.
 1) தனிமொழி 2) புறச்சொல் 3) ஆகாயக் கிளர்த்தல்
 4) தன்னுரை 5) அகமொழி (…….)

06. பின்வரும் நாடகம் பற்றிய கூற்றுக்களில் அடியார்க்கு நல்லாரின் கூற்று
 1) நாடகம் வாழ்வின் ஒரு துண்டம்
 2) கதை தழுவி வரும் கூத்து
 3) உலக நடைமுறைகளைப் போலச் செய்வது
 4) யாதேனும் ஒரு செயலைப் போலச் செய்தல்
 5) வாழும் சூழலால் வரும் ஆற்றுகை முறையின் தொகுப்பு
 (…….)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

07. கிரேக்க நாடகங்களுடன் தொடர்புடைய மேல்வரும் கூற்றுக்களை எழுதுக.

அ. தெய்வங்களுக்கும் மனிதர்களுக்குமான முரணை கூறுவது.
ஆ. அக்கால அரசியல் நிலைமைகளை கிண்டல் செய்வது.
இ. துன்ப வாழ்வை துணிவோடு ஏற்க வேண்டும் என்ற பக்குவத்தினை வலியுறுத்துவது.
ஈ. துன்பம் பயங்கரம் என்பவற்றை அடித்தள உணர்வாகக் கொண்டது.
உ. கற்பனை அழகும் மொழி வளமும் நிறைந்தது.

மேற்குறிப்பிட்ட கூற்றுக்களுள் ‘ரஜடி’ பற்றிய சரியான கூற்றுக்களைக் கொண்ட தொகுதி

1) அ, ஆ, இ  2) அ, இ, உ  3) அ, இ, ஈ  4) ஆ, இ, உ  5) ஆ, ஈ, உ

(…….)

08. அரங்கின் ஆக்கக் கூறுகளில் இலக்கியத்துடன் தொடர்புபடுவது.

1) நடிப்பு  2) நாடக எழுத்துரு  3) இசை
4) காட்சி விதானிப்பு  5) ஒப்பனை  (…….)

09. மேல்வருவனவற்றுள் நாடகத் தயாரிப்புடன் தொடர்புடைய கூற்று அல்லாதது.

1) எழுத்துருவை உயிரோட்டமான கலையாக மேடையில் படைத்தல்.
2) நாடகத் தயாரிப்பு தொடர்பான அடிப்படைப் பொறுப்பை வகித்தல்.
3) நிதி தொடர்பான செயற்பாடுகளுக்கு பொறுப்பாக இருத்தல்.
4) விளம்பரம் செய்தல், நெறியாளரை தெரிவு செய்தல் போன்ற பணிகள்.
5) நாடக ஆற்றுகை தொடர்பான அனைத்து விடயங்களையும் ஒழுங்கமைத்தல்.  (…….)

10. கிரேக்க ரஜடியில் ‘கோரஸ்’ பிரதிநிதித்துவம் செய்வது.

1) நடிகரை  2) சமூகத்தை  3) பாத்திரங்களை
4) தெய்வங்களை  5) நாடகத் தயாரிப்பாளரை  (…….)

11. மேல்வருவோருள் மிகைப்பாட்டு வாத நாடக ஆசிரியர் அல்லாதவர்.

1) ஹில்லர்  2) அல்பிரட் வீகனி  3) அல்பிரட்டி முஸ்ஸெற்
4) விக்டர்குகோ  5) றெலே கல்பேட் டிபி சறிக்கோட்  (…….)

12. மேல்வரும் கூற்றுக்களைக் கருதுக.

அ. இயற்பண்பு வாதத்தின் முதலாவது நாடகாசிரியர் ஆவார்.
ஆ. நடிகர் நாடகம் ஆடாது பார்ப்போர் முன்னிலையில் வாழ வேண்டும்.
இ. குறியீட்டு வாதத்தைப் பயன்படுத்தினார்.
ஈ. பிரச்சினை நாடகங்கள் என அழைக்கப்பட்டன.
உ. Therese Ragaim இவரது நன்கு அறியப்பட்ட நாடகமாகும்.

இவற்றுள் எமிலி சோலாவுடன் தொடர்புடைய கூற்றுக்கள் யாவை?

1) அ, ஆ, இ  2) அ, ஆ, உ  3) ஆ, இ, ஈ  4) ஆ, ஈ, உ  5) இ, ஈ, உ

(…….)

13. பின்வருவனவற்றுள் ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கு தொடர்பில் பொருத்தமற்ற கூற்று யாது?

1) ஒடுக்கப்பட்டோரின் பிரச்சினையைக் கொண்டிருக்கும்.
2) ஒடுக்கப்பட்டோரை விழிப்படையச் செய்யும்.
3) ஒடுக்கப்பட்டோரைப் பங்கு கொள்ள வைக்கும்.
4) ஒடுக்கப்பட்டோரை சிந்திக்கத் தூண்டும்.
5) ஒடுக்கப்பட்டோருக்கு தீர்வுகளைப் போதிக்கும்.  (…….)




agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

14. “மேயர் கோல்ட் இன் நடிப்புக் கோட்பாடு அறியப்படுவது.
    1) முறைமைக் கோட்பாட்டினால்.
    2) விவாத அரங்க முறையிலானால்
    3) தொலைப்படுத்தல் முறைமையால்.
    4) உயிர்ப்பொறி முறையினால்.
    5) பிரயோக அரங்க முறையினால். (…….)

15. படத்தில் காட்டப்பட்டுள்ளவரால் முன்வைக்கப்பட்ட அரங்கு யாது?



    1) சடங்கு அரங்கு
    2) வறுமை அரங்கு
    3) வலிந்து தாக்கும் அரங்கு
    4) சூழல் அரங்கு
    5) விவாதக்கள அரங்கு. (…….)

16. சமஸ்கிருத நாடகத் தலைவனின் முயற்சி வெற்றி பெற வேறு ஒருவன் துணைபுரிவதை குறிக்கும் சொல்.
    1) பிரசுரி 2) பிந்து 3) பிஜ 4) காரிய 5) பதாக (…….)

17. நாட்டிய சாஸ்திரத்தில் ‘சகிர்தையர்’ என அழைக்கப்படுபவர்.
    1) நடிகர்கள் 2) பார்ப்போர்கள் 3) பிராமணர்கள்
    4) நடனப் பெண்கள் 5) போர் வீரர்கள் (…….)

18. பின்வரும் கூற்றுக்களுள் “நாட்டிய தர்மி” பற்றிய சரியான கூற்று
    1) போலித்தன்மை அற்றது 2) உலக இயற்கையை பின்பற்றுவது
    3) லலித அங்க அசைவைக் கொண்டது 4) நடைமுறை வாழ்வியலை ஒத்தது
    5) இயல்பான அபிநயங்களை வெளிப்படுத்துவது (…….)

19. ஐரோப்பாவில் ‘பிரச்சனைகளின் நாடக ஆசிரியர்கள்’ என வர்ணிக்கப்பட்டவர்கள்.
    1) அகஸ்தோ போவால், இப்ஸன் 2) சோபோகிளிஸ், செனேக்கா
    3) பிரக்ட், பீற்றர் புறூக் 4) ஷேக்ஸ்பியர், யூரிப்பிடீஸ்
    5) மெனான்டர், இப்ஸன் (…….)

20. யப்பானிய நோ அரங்கு ஒன்றின் அழகியலை திருப்தி எவ்வாறு அழைக்கப்படும்.
    1) கதாசிஸ் 2) ரஸம் 3) சுவை 4) யூஜின் 5) சமநிலை (…….)

21. நோ நாடக மரபில் ‘உபர’ (uba) எனப்படும் வேடமுகம் குறிக்கும் பாத்திரம்.
    1) கிழவன் 2) கிழவி 3) போர் வீரன்
    4) சூனியக்காரி 5) கன்னிப்பெண் (…….)

22. மேல்வருவோருள் கோயிற் பண்பாட்டுக் காலத்தில் அரச சபைகளிலும் கோயில்களிலும் நடனமாடிய பெண்கள் அல்லாதோர்.
    1) பதியிலார் 2) மாணிக்கத்தார் 3) சதூரிமாணிக்கம்
    4) கோயில் பிணாப் பெண்டுகள் 5) விறலியர் (…….)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

23. தமிழ் நாட்டின் நாடக வரலாறு பற்றிய பின்வரும் கூற்றுக்களை கருதுக.
 அ. மன்னர்களை மகிழ்வித்தல்.
 ஆ. அடிநிலை மக்களின் வாழ்வைப் பிரதிபலித்தல்.
 இ. ஆலயம் பூசைகளை சிறப்பித்தல்.
 ஈ. மன்னர்களின் வரலாற்றை கூறுதல்.
 உ. விடுதலை உணர்வை முதன்மைப்படுத்துதல்.
 மேற்கூறப்பட்ட கூற்றுக்களில் 'கோவில் பண்பாட்டுக்கால' அரங்கின் இயல்புகளை சித்தரிக்கும் கூற்றுக்கள்
 1) அ, இ, உ  2) அ, ஆ, இ  3) ஆ, இ, உ  4) அ, ஈ, உ  5) அ, இ, ஈ
 (…….)

24. தை நீரோட்டல் சடங்காற்றுகை போல காணப்படும் இன்னொரு ஆற்றுகை மரபு.
 1) வேட்டுவ வரி  2) ஆய்ச்சியர் குரவை  3) திரு வெம்பாவை
 4) சூரன் போர்  5) வேலன் வெறியாடல்
 (…….)

25. சோழர் காலத்தில் தஞ்சையில் நாடகம் ஆடுவதற்காக அமைக்கப்பட்ட அரங்க வெளி யாது?
 1) ஆடுகளம்  2) கூத்தாட்டவை  3) நாடகசாலை  4) பண்ணை  5) களரி
 (…….)

26. 'ரட்டயக்கும்' எனும் சடங்காற்றுகை நிகழ்த்தப்படும் அரங்கவெளி.
 1) கரலிய  2) களத்து மேடு  3) சன்னியக்வீதிய  4) பூங்குடிசை  5) சுடலை  (…….)

27. "சிங்கள நாட்டார் நாடகம்" (The Sinhalese Falk play) எனும் நூலின் ஆசிரியர்.
 1) நியூமான் ஜிபால் ஆவார்  2) இ. எவ். சீ லுடோவைக் ஆவார்
 3) ஜோன் டிசில்வா ஆவார்  4) எதிரி வீர சுரத்சந்திர ஆவார்
 5) சார்ள்ஸ்டயஸ் ஆவார்
 (…….)

28. இலங்கையில் தயாரிக்கப்பட்ட பழைமையான "நாடகம்"
 1) ஹரிஸ்சந்திர ஆகும்  2) அஹலே பொல ஆகும்
 3) சிங்கபாகு ஆகும்  4) பத்மாவதி ஆகும்
 5) ஶ்ரீ விக்கிரம ராஜசிங்க ஆகும்.
 (…….)

29. சிங்கள நாடக வரலாற்றில் "வீதி நாடக உலகின் அரசன்" என வரிணிக்கப்படுபவர்.
 1) தம்ம ஜாகொட  2) ஆர். ஆர். சமரக் கோன்
 3) காமினி ஹத்தொட்டுவேகம  4) சுகதபால டி சில்வா
 5) குணசேன கலப்பதி
 (…….)

30. அருகிலுள்ள நாடகக் காட்சி இடம்பெறும் நாடகம்



 1) மனமே
 2) சாகுந்தலம்
 3) கோடை
 4) லியர்மன்னன்
 5) இராவணேசன்
 (…….)



Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

31. மேல்வருவனவற்றுள் சத்தியவான் சாவித்திரி இசை நாடகத்தில் பாத்திரங்களை வரிணிக்கும் பாடல்
    1) பாத பங்கயம் சிறுபறை 2) பறை, தம்பட்டம் 3) பறை, சொர்ணாழி
    4) மத்தளம், சல்லாரி 5) பறை, உடுக்கு (…….)

32. நாடகமொன்றில் பாத்திரங்களின் உணர்வுகளை வெளிப்படுத்த இசைக்கப்படும் இசை.
    1) கரு இசை 2) பண்பாட்டு இசை 3) பின்னணி இசை
    4) மனநிலை இசை 5) குறியீட்டு இசை (…….)

33. இசை நாடகங்களில் இசையானது.
    1) பின்னணியாக தொழிற்படும் 2) உணர்வை வெளிப்படுத்தும்
    3) ஆடல்களுக்கு உதவும் 4) பிரதான மூலகமாக தொழிற்படும்
    5) செயல்களுக்கு உதவும் (…….)

34. மத்திய கால பொது வணக்க முறை நாடகங்கள் ஆற்றுகை செய்யப்பட்ட அரங்க வெளி.
    1) தேவாலயம் 2) ஊர்தி அரங்கு 3) பூத் அரங்கு
    4) பட்டணச் சதுக்கம் 5) மான்சன் அரங்கு (…….)

35. அபத்த நாடகப் பண்பு அல்லாதது.
    1) வகை மாதிரிப் பாத்திரங்கள் காணப்படல்.
    2) காரண, காரியத் தொடர்பு.
    3) அர்த்தமுள்ள மொழிப் பிரயோகம்.
    4) காரண, காரியத் தொடர்பின்மை.
    5) மோடிமைப் பாங்கான நடிப்பு. (…….)

36. ஈழத்தில் கலையரசு சொர்ணலிங்கம் ஸ்தாபித்த நாடக சபையின் பெயர்.
    1) போய்ஸ் கொம்பனி 2) லங்கா சுபோத விலாசசபை 3) சுகுண விலாச சபை
    4) சரஸ்வதி விலாச சபை 5) சுகிர்த விலாச சபை (…….)

37. ‘கொமேடியா டெல் ஆர்த்தே’ எனும் நாடக வகை தோற்றம் பெற்றது.
    1) கிரேக்கத்தில் 2) இத்தாலியில் 3) உரோமில்
    4) பிரான்சில் 5) யப்பானில் (…….)

38. நவீன அரங்கச் செயற்பாடுகளுக்கு ‘சடங்கு அரங்க’ நுடபங்களை பிரயோகிக்காதவர்.
    1) பெற்றோல்ட் பிரகட் 2) குரொட்டோவ்ஸ்கி 3) அன்ரோனியா ஆர்த்தோ
    4) பீற்றர் புறூக் 5) அகஸ்தோபோவால் (…….)

39. கண்ணகி அம்மன் குளுத்திச் சடங்கு நடைபெறும் மாதம்.
    1) தை 2) மாசி 3) பங்குனி 4) சித்திரை 5) வைகாசி
    (…….)

40. 18ம் நூற்றாண்டில் தோன்றியதும் கலைஞனின் பகுத்தறிவைவிட கற்பனைக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றதும் காரண காரிய தொடர்பிற்கு முதன்மை வழங்கப்பட்டதுமான நாடக மரபு.
    1) இயற்பண்பு வாதம் 2) யதார்த்த வாதம் 3) கற்பித வாதம்
    4) மிகைப்பாட்டு வாதம் 5) வெளிப்பாட்டு வாதம் (…….)

(1x4 = 40 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி II

➢ **பிரிவு A இல் இருந்து இரண்டு வினாக்களையும், பிரிவு B இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவுசெய்து நான்கு வினாக்களுக்கு மட்டும் விடைதருக.**

### உப பகுதி – A

01. i) நாடகக் கலையின் தனித்துவமான பண்புகளை எடுத்துக்காட்டுக. (5 புள்ளி)
    ii) 'நாடக ஆற்றுகை' என்ற எண்ணக்கருவை உதாரணங்கள் தந்து விளக்குக. (5 புள்ளி)
    iii) நாடகத்திற்கும் இலக்கியத்திற்கும் இடையேயான உறவு வேறுபாட்டை விளக்குக. (5 புள்ளி)

02. i) நடிப்புச்செயற்பாட்டில் 'செய்தல்', 'செய்து காட்டல்' என்பவற்றுக்கான வேறுபாட்டை விளக்குக. (5 புள்ளி)
    ii) புத்தளிப்பு ஆற்றுகை ஒன்றில் ஈடுபட்ட உமது அனுபவத்தை விபரிக்குக. (5 புள்ளி)
    iii) நாடக பாடம் ஒன்றை ஆற்றுகை செய்த உமது அனுபவத்தை விபரிக்குக. (5 புள்ளி)

03. i) தமிழ் நாட்டின் அரங்க வளர்ச்சிக் காலங்களை பட்டியற்படுத்துக. (3 புள்ளி)
    ii) சங்க காலத்தில் எவற்றை அடிப்படையாக கொண்டு ஆற்றுகை இடம்பெற்றதை விபரிக்குக. (6 புள்ளி)
    iii) 1947 பின் முன்னெடுக்கப்பட்ட அரங்கச் செயற்பாடுகளின் நோக்கங்களை சுருக்கமாக தருக. (6 புள்ளி)

### உபபகுதி B

04. அரங்க வெளியின் 'பௌதீகத் தன்மை' ஆற்றுவோர், - பார்ப்போர் உறவில் ஏற்படுத்தும் தாக்கத்தினை 'படச்சட்ட அரங்கினையும் தெருவெளி அரங்கினையும்' அடிப்படையாக கொண்டு விளக்குக. (15 புள்ளி)

05. i) சமஸ்கிருத நாடக ஆசியர்களை குறிப்பிட்டு அவர்களது நாடகங்களையும் பட்டியற்படுத்துக. (5 புள்ளி)
    ii) நாட்டிய சாஸ்திரம் கூறும் இரண்டு வகை (தர்மிகள்) நடிப்புப்பாணிகள் பற்றி தெளிவுபடுத்துக. (5 புள்ளி)
    iii) நிருத்த, நிருத்திய, நாட்டிய என்பன பற்றி விளக்குக. (5 புள்ளி)

06. பின்வருவனவற்றில் எவையேனும் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
    1) கதாசிஸ்
    2) யதார்த்த வாதம்
    3) தொலைக்காட்சி நாடகம்
    4) ஒபேறா
    5) இசை நாடகம்

(5x3 = 15 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணை பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 6th Term Examination - 2022

FWC

| | | |
|---|---|---|
| நாடகமும் அரங்கியலும் - II<br>Drama & Theater - II | Three Hours<br>Gr. 13 (2022) | 58 T II |

## பகுதி – I

➢ **இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும், பொருத்தமானதுமான விடையை தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தினை அடைப்புக் குறியினுள் எழுதுக.**

01. ஈழத்தில் வெளிவந்த நாடக சஞ்சிகைகளைக் கொண்ட தொகுதி எது?
(1) வெளிச்சம், கலைமுகம், ஜீவநதி
(2) அரங்கம், ஆற்றுகை, கூத்தரங்கம்
(3) வெளிச்சம், ஓலை, காலச்சுவடு
(4) கலைமுகம், ஜீவநதி, ஆற்றுகை
(5) அரங்கம், ஓலை, காலச்சுவடு (…….)

02. நாடகம் ஒன்றில் குரல், பாடல், சொல்லாடல் மூலம் கருத்தை புலப்படுத்துவது.
(1) ஆஹர்யம் (2) சாத்வீகம் (3) வாச்சீகம், ஆங்கீகம்
(4) ஸ்தாயிராவ அபிநயம் (5) ஆங்கீகம் (…….)

03. ஈழத்தின் முதல் தெருவெளி நாடகமாகக் கருதப்படுவது?
(1) கசிப்பு (2) மாயமான் (3) திருவிழா
(4) விடுதலைக்காளி (5) மண்சுமந்த மேனியர் (…….)

04. அதிகளவான காதல் சுவையினைக் கொண்டிருக்கும் கூத்து வடிவம்.
(1) தென்பாங்கு (2) வாசாப்பு (3) வடபாங்கு
(4) வடமோடி (5) தென்மேடி (…….)

05. ஈழத்தில் எழுந்த வர்க முரண்பாட்டுகளை சித்தரித்த நாடகங்கள் எவை?
(1) சங்காரம், பெறுத்தது போதும் (2) விழிப்பு, அபசுரம்
(3) காலம் சீவக்கிறது கடுளியம் (4) கோபுரவாசல், கந்தன் கருணை
(5) காலங்கள் அளிவதில்லை, காலம் சிவக்கிறது (…….)

06. வாயு விளக்குகள் முதன் முதல் பயன்படுத்தப்பட்ட அரங்கு.
(1) கிரேக்க அரங்கு (2) இத்தாலி அரங்கு (3) லண்டன் அரங்கு
(4) மத்தியகால அரங்கு (5) ஜேர்மன் அரங்கு (…….)

07. ஒளி விதானிப்பின் போது பாத்திரத்தை குறிப்பாக சுட்டும் ஒளி விளக்கு.
(1) குறிப்பு ஒளி (2) கீற்றொளி (3) மங்கலாக்கி
(4) பொட்டொளி (5) பெருக்கொளி (…….)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

08. கிரேக்க நாடகங்களில் அங்கதப் பண்புடைய வடிவம்
(1) சற்றயர் (2) மகிழ்நெறி (3) அவலச்சுவை
(4) விகட நாடகம் (5) வீர நாடகம் (.......)

09. பல்லவர் காலத்தில் எழுதப்பெற்ற அங்கத சுவையுடைய நாடகம்.
(1) இராஜராஜேஸ்வர நாடகம் (2) மத்தவிலாசப் பிரகசனம் (3) பூம்புவியர் நாடகம்
(4) சாக்கை கூத்து (5) ஆரியக் கூத்து (.......)

10. சங்க காலத்தில் கோடு, முழவு ஆகிய இசைக் கருவிகளை பயன்படுத்தியோர்.
(1) கோடியர் (2) வயிரியர் (3) பொருளர்
(4) பாணர் (5) விறலியர் (.......)

11. பின்வருவனவற்றுள் கலித்தொகை அமைப்பில் இடம் பெறாத அம்சம்.
(1) சுரிதகம் (2) தாழிசை (3) தனிச்சொல்
(4) தரவு (5) துரிதம் (.......)

12. ஷேக்ஸ்பியர் தனது நாடகங்களில் முதன்மையாகக் கொண்ட மூலகம்.
(1) வேட உடை (2) இசை (3) சொற்கள்
(4) வேடப்புனைவு (5) மேடை ஒலி (.......)

13. சமஸ்கிருத அரங்கப் பகுதிகளில் ஒன்றான 'ரங்கபிதா' என்பது.
(1) ஒப்பனை அறை (2) பார்ப்போர் கூடம் (3) அரங்கப் பொருட்கள்
(4) பிரதான மேடைப் பகுதி (5) பிரதான வாயில்கள் (.......)

14. காளிதாசரின் 'சகுந்தல நாடகத்தின் மூலக்கதைக் குரியது.
(1) மகாபாரதம் (2) இராமாயாணம் (3) மகாபுராணம்
(4) சிவபுராணம் (5) கந்தபுராணம் (.......)

15. படத்தில் காட்டப்பட்டுள்ள வேடமுகம்



(1) யப்பானிய மரபிற்குரியது.
(2) சீனமரபிற்குரியது.
(3) கிரேக்க மரபிற்குரியது.
(4) சிங்கள மரபிற்குரியது.
(5) இந்தோனேசிய மரபிற்குரியது. (.......)

16. ஈஸ்கலசின் முக்கூட்டு நாடகத் தொகுதிக்குள் அடங்குவது.
(1) ஈடிப்பஸ், ஈடிப்பஸ் றெக்ஸ், அன்ரிகனி
(2) அகமெனன், ஈடிப்பஸ், அஜெக்ஸ்
(3) மெலிற்றஸ், சோபெரி, ஈடிப்பஸ்
(4) அகமெனன், சோபெரி, யூமெனிற்ஸ்
(5) பேசியன், சப்ளைனராஸ், அகமெனன் (.......)

17. மத்திய காலத்து 'குவெம் குவாறிற்றிஸ் நாடகம்' ஒரு
(1) பொதுவணக்கமுடைய நாடகம் (2) அற்புத நாடகம்
(3) திருமறை நாடகம் (4) ஒழுக்கப் பண்பு நாடகம்
(5) புனிதரின் நாடகம் (.......)

18. பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகங்கள் என்பன
(1) செவ்வியல் அரங்குகள் (2) சொல்லாடல் அரங்குகள் (3) கதை கூறும் அரங்குகள்
(4) சடங்கு சாந் அரங்குகள் (5) இசைப்பாடல் அரங்குகள் (.......)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

19. பம்மல் சம்பந்த முதலியாரால் உருவாக்கப்பட்ட நாடக கம்பனி
(1) சுகிர்த விலாச சபை (2) சுகுண விலாச சபை (3) சுபோத விலாச சபை
(4) சரஸ்வதி விலாச சபை (5) போய்ஸ் நாடக கம்பனி (…….)

20. படத்தில் காட்டப்பட்ட வேட முகம் எந்த பரபிற்குரியது



(1) சற்றயர் (2) கொமெடி
(3) வரலாறு (4) பொது வணக்க முறை
(5) திறஜெடி (…….)

21. ஒரு பாவையின் வீடு நாடகத்தில் இடம்பெறாத பாத்திரம்.
(1) ஹெல்மர் (2) கிறிஸ்ரீனா (3) லோறா
(4) நோறா (5) குறொக்ஸ்டட் (…….)

22. 'ஈடிப்பஸ் மன்னன்' என்ற நாடகத்தின் இறுதியில் ஜொகஸ்டா.
(1) கண்களை குத்தி குருடாக்கிக் கொள்கிறான்.
(2) சித்தறென் மலையில் அடபட்டு சாகிறான்.
(3) கொரிந் வாசியால் கொலை செய்யப்படுகிறான்.
(4) கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்கிறான்.
(5) தன்னைத் தானே குத்திக்கொண்டு சாகிறான். (…….)

23. 'இராவனேசன்' நாடகத்தில் 'உந்தன் உதிரமையா உனக்கிது உதவாமல் போய்விடுமா' என்ற பாடலுக்குரிய பாத்திரம்.
(1) கும்பகர்ணன் (2) இந்திரஜித் (3) விபீஸ்னன்
(4) அனுமான் (5) சுக்கிரீவன் (…….)

24. அபிஞ்ஞான சாகுந்தல நாடகத்தில் வரும் பெண் பாத்திரங்களைக் கொண்ட தொகுதி.
(1) சகுந்தலை, அதிதி, பிரியம்வதை, நடி
(2) சகுந்தலை, கஞ்சுகி, மாதலி, அனசூயை
(3) பிரியம்வதை, அனசூயை, கஞ்சுகி, சகுந்தலை
(4) கௌதமி, சானுமதி, மாதலி, சகுந்தலை
(5) நடி, அதிதி, சகுந்தலை, மாதலி (…….)

25. 'நான் இந்த விருட்சங்கள் மீது எனது சகோதரர்கள் போன்று அன்பைச் செலுத்துகின்றேன்' எனக் கூறிய பாத்திரம்.
(1) அன்ரிகனி (2) நோறா (3) சகுந்தலை
(4) ஜெகஸ்டா (5) இராவணன் (…….)

26. "என்றோ ஒருநாள் இருந்து பார் மாணிக்கம் நின்றந்தக் கோயில் நிமிர்ந்து" இவ் உரையாடலுக்குரிய பாத்திரம்.
(1) விதானை (2) கணேசு (3) முருகப்பு
(4) காசி (5) பஞ்சையர் (…….)

27. "அவர் கொலை செய்யப்பட்டார் அறியப்படாத கொலையாளியை நாம் நீதியின் முன் ………. அர்தமாகும்" இக்கூற்றினை கூறியவர்.
(1) செய்தியாளன் (2) கோரஸ் (3) இடையன்
(4) கிறியோன் (5) ஜெகஸ்டா (…….)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

28. லியர் மன்னன் நாடகத்தில் வரும் 'கோடிலியா' என்ற பாத்திரத்தின் பண்பாக கருதக்கூடியது.
   (1) பதவி ஆசை கொண்டவள்.
   (2) லியரை நேர் எதிரே புகழாதவள்.
   (3) சொத்துக்கு ஆசைப்பட்டவள்.
   (4) வெளித் தோற்றத்திற்கு நல்லவள்.
   (5) வெளித் தோற்றத்திற்கு அமைதியானவள். (.......)

29. A. உங்களைப் பார்ப்பதற்கு ஒரு பெண்மணி வந்திருக்கிறார் அம்மா.
   B. நல்லது அவரை உள்ளே வரக்காட்டு.
   C. அவர் நேராக என் படிப்பறைக்கு போய்விட்டாரா
   மேற்படி உரையாடலில் இடம்பெறும் பாத்திரம் முறையே
   (1) பணிப்பெண், நீல்ஸ், ஹெல்மர் (2) பணிப்பெண், நோறா, லிண்டே
   (3) ஹெல்மர், நோறா, ராங் (4) பணிப்பெண், நோறா, ஹெல்மர்
   (5) நோறா, ஹெல்மர், நோறா (.......)

30. அருகில் காணப்படும் அரங்கிற்குரிய நாடு.
   (1) சீனா
   (2) கிரேக்கம்
   (3) யப்பான்
   (4) இங்கிலாந்து
   (5) உரோம் (.......)



31. ஆசிரியர் விரும்புவதை ஆசிரியரின் உணர்வினை பார்ப்போருடன் தொடர்புபடுத்துவதில் பிரதானமானவர்.
   (1) நெறியாளர் (2) தயாரிப்பாளர் (3) இசையமைப்பாளர்
   (4) நடிகர் (5) ஒலிவிதானிப்பாளர் (.......)

32. பின்வருவனவற்றுள் கருத்தூன்றல் அவதான பயிற்சிக்குரிய விளையாட்டு.
   (1) ஆடும்வீடும் (2) கோழிகோட்டான் (3) பழக்கலவை
   (4) கரடியும் கிராம மக்களும் (5) நண்டு, இறால், மீன் (.......)

33. புனைகதை ஒன்றில் இருந்து நாடக எழுத்துரு வேறுபடுவது.
   (1) கதை சொல்லும் வடிவம் (2) பாத்திரங்கள் பேசும்
   (3) சம்பவங்கள் காணப்படும் (4) பாத்திரங்கள் காணப்படும்
   (5) சொற்களால் ஆக்கப்பட்டிருக்கும் (.......)

34. இலங்கையின் வடபுலத்தில் மட்டும் ஆடப்படும் கூத்து மரபு.
   (1) வடமோடி (2) காத்தவராயன் (3) மகிடி
   (4) தென்மோடி (5) வசந்தன் (.......)

35. "ரவர் கோல்" நாடக மரபு என்று கூறப்படுவது
   (1) கோலம் (2) நாடகம் (3) நூர்த்தி
   (4) சொக்கரி (5) சரச்சந்திரா மரபு (.......)





agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk


(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

- ***36 – 40 வரையான வினாக்களிற்கு கீழ்வரும் படங்களை அடிப்படையாக கொண்டு விடை தருக.***



A


B


C


D


E


F

36. ஆற்றுவோருக்கும், பார்ப்போருக்கும் இடையேயான உறவில் “பங்கு கொள்ளல்” செயற்பாட்டின் இன்றியமையாமையை வலியுறுத்திய அரங்கவியலாளர்.
    (1) A (2) B (3) C (4) D (5) E (……..)

37. உடற்பொறிமுறை கோட்பாட்டை அரங்கில் முன்வைத்தவர்.
    (1) A (2) C (3) D (4) B (5) E (……..)

38. இயற்பண்புவாத நாடக மோடியின் முன்னோடி.
    (1) B (2) C (3) D (4) E (5) A (…….)

39. மகாபாரதத்தினை ஒன்பது மணிநேர தயாரித்த அமெரிக்க நெறியாளர்.
    (1) A (2) B (3) C (4) E (5) D (…….)

40. உலகப் புகழ் பெற்ற அபத்த நாடக ஆசிரியர்.
    (1) A (2) B (3) C (4) D (5) E (…….)

(40x1 = 40 புள்ளிகள்)

agaram.lk

## பகுதி – II

- **உப பகுதி A இலிருந்து இரண்டு வினாக்களையும் உப பகுதி B இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக**

### உப பகுதி A
**(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக)**

1. i) ‘ஒரு பாவையின் வீடு’ நாடகத்தின் பிரதான கரு யாது? *(3 புள்ளிகள்)*
   ii) நோறா, கிறிஸ்ரீனா ஆகிய பாத்திரங்களின் இயல்புகளை விளக்குக. *(5 புள்ளிகள்)*
   iii) “இப்சனின் நாடகத்தில் காட்சிப் பொருளும் கதை சொல்லும்” எனும் கூற்றின் பொருத்தப்பாட்டை ஒரு பாவை வீடு நாடக பாடத்தை ஆதாரமாகக் கொண்டு விபரிக்குக. *(5 புள்ளிகள்)*

2. i) அபிந்ஞான சாகுந்தலத்தில் இடம்பெறும் பிரதான பாத்திரங்களை குறிப்பிடுக. *(3 புள்ளிகள்)*
   ii) ஒவ்வொரு பாத்திரங்களினதும் இயல்புகளைச் சித்தரிக்குக. *(5 புள்ளிகள்)*
   iii) சமஸ்கிருத நாடகங்களின் பொதுவான பண்புகளுடன் இந்நாடகம் ஒத்துப் போவதே உதாரணங்களுடன் விளக்குக. *(7 புள்ளிகள்)*

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

Agaram.LK - Keep your dreams alive!

3. i) 'இடிப்பஸ் மன்னன்' 'இராவணேசன்' நாடகங்களின் நாயகர்களான, 'இடிப்பஸ், இராவணன்' ஆகிய பாத்திரங்களின் பண்புகளை குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

ii) அப்பாத்திரப் பண்புகளில் ஒன்று அவர்களை 'அவல முடிவினை நோக்கி வருவித்த விதத்தினை ஒப்பீடு செய்து விபரிக்குக.

(3x5 = 15 புள்ளிகள்)

**உபபகுதி B**

**(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக)**

4. i) 'கூத்து' என்ற கலை வடிவத்தினை அடையாளப்படுத்தும் அதன் கூறுகளை முன்வைத்து விபரிக்குக. (6 புள்ளிகள்)

ii) பாரம்பரிய கூத்து வடிவத்தினை அடிப்படையாகக் கொண்டு ஈழத்து தமிழ் அரங்கில் மேற்கொள்ளப்பட்ட நவீன முயற்சிகளை விபரிக்குக. (9 புள்ளிகள்)

5. ஈழத்து தமிழ் அரங்க வளர்ச்சியில் பங்களிப்பு நல்கிய மூன்று அரங்க நிறுவனங்களை இனங்கண்டு அவை ஆற்றிய பங்களிப்பினை முன்வைக்குக. (15 புள்ளிகள்)

6. பின்வரும் எவையேனும் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
   1) கிரேக்க 'கொமடி' நாடகம்.
   2) மத்திய கால 'அற்புத' நாடகம்.
   3) தமிழக 'தெரு கூத்து'
   4) சிங்கள 'கோலம்' நாடகம்.
   5) நாட்டை

(5x3=15புள்ளிகள்)

agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk